1393

சென்னை – 15, கல்லூரிக் கல்வி இயக்குநர் (மு.கூ.பொ) அவர்களின் செயல்முறை ஆணை
பிறப்பிப்பவர் : முனைவர்.(திருமதி). கோ. கீதா.எம்.எஸ்ஸி., எம்.ஃபில்., பி.எச்டி.,

---

திருவள்ளுவர் ஆண்டு 2054, சோபகிருது புரட்டாசி திங்கள் 24 ஆம் நாள்
நி.மு.எண். 8664/பி3/2022 நாள். .10.2022

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி – 2021-2022 ஆம் ஆண்டு உதவியாளர் பதவி உயர்வுக்கான தகுதிவாய்ந்தோர் பெயர் பட்டியல் வெளியிடப்பட்டமை – தற்காலிக உதவியாளர்களாக நியமனம் செய்யப்பட்ட பணியாளர்கள் பணியினை வரன்முறைப் படுத்துதல் – ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை: கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். 8664/பி3/2022 நாள். 06/06/2022

----

பார்வையில் காணும் செயல்முறை வாயிலாக 2021–2022 ஆம் ஆண்டிற்கு உதவியாளர் பதவி உயர்வுக்கு தகுதி வாய்ந்த 17 இளநிலை உதவியாளர் / தட்டச்சர் / பண்ட காப்பாளர் ஆகியோர்களுக்கு உதவியாளர்களாக பதவி உயர்வு வழங்கி ஆணையிடப்பட்டது. இவ்வாணையின் வரிசை எண்.02 இல் இடம் பெற்றுள்ள எஸ்.சையத் இம்ரான் என்பார் மட்டும் உதவியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்ட பணியிடத்தில் இதுநாள் வரையில் பணியில் சேரவில்லை. இப்பணியாளரை தவிர்த்து இணைப்பில் குறிப்பிட்டுள்ள 16 பணியாளர்கள் உதவியாளர்களாக பணியில் சேர்ந்துள்ள பணிசேர் அறிக்கையானது சார்ந்த இணை இயக்குநர் அலுவலகம் / கல்லூரிகளிலிருந்து பெறப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், தற்காலிகமாக உதவியாளர்களாக நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வரும் இச்செயல்முறையின் இணைப்பில் கண்டுள்ள உதவியாளர்களுக்கு அவர்களது பெயருக்கு எதிராக குறிப்பிட்ட நாள் முதல் உதவியாளர் பணி நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

தட்டச்சர் / பண்டகக்காப்பாளர் பதவியிலிருந்து உதவியாளராக பதவி உயர்வு செய்யப்பட்டவர்கள் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி 35 (ab)ன்படி பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி முடித்த பின்னரே உதவியாளர் பணி நிலையில் அடுத்த ஆண்டு ஊதிய உயர்வு அனுமதிக்கப்பட வேண்டுமென தெரிவிக்கலாகிறது.